# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)

## கோயமுத்தூர் - 641 018

B.A. தமிழ் - முதலாமாண்டு

இலக்கணம் - நன்னூல் - சொல்லதிகாரம்

இரண்டாம் பருவம் - 18 BTA 23C

அலகு - I

பெயரியல்


பெயர் : மு. ஜோதி

துறை : தமிழ்த் துறை

அலைபேசி : 94871 93006

# நன்னூல் - சொல்லதிகாரம்

## அலகு - 1 - பெயரியல்

### சொல்லின் பொது இலக்கணம்

சொல், தனிச் சொல், கூட்டுச் சொல், பொதுச்சொல் என மூன்று நிலையில் அமையும். அவை இருதிணை, ஐம்பால், மூவிடம், வழக்கு செய்யுள் போன்ற பொருண்மைக்கள் அடங்கும். சொல் பொருளை உணர்த்துவதோடு தன்னையும் உணர்த்தும். பொருள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணரப்படும்.

### பால்

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்று பாலும் உயர்திணையில் அடங்கும். எண் அடிப்படையில் ஒன்றன்பால் பலவின்பால் என அஃறிணையில் இரண்டே பால் அமையும்.

### மூவிடங்கள்:

தன்னைக் குறிக்கும் தன்மை, முன்னின்றாரைக் குறிக்கும் முன்னிலை, அயலில் இருப்பவரைக் குறிக்கும் படர்க்கை என இடங்கள் மூவகைப்படும்.

### வழக்கு

வழக்கு இரு வகைப்படும். அவை

1. இயல்பு வழக்கு
2. செய்யுள் வழக்கு

## இயல்பு வழக்கு

எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லால் வழங்குவது இயல்பு வழக்காகும். அவை 3 வகைப்படும். அவை

1. இலக்கணம் உடையது 2. இலக்கணப் போலி 3. மரூஉ

1. **இலக்கணம் உடையது:**

காலந்தோறும் சொற்களில் எந்தவித மாற்றமும் இல்லாமல் இயல்பாக வரக்கூடியவை. நிலம், நீர், தீ.

2. **இலக்கணப் போலி:**

இலக்கண அமைப்பில் மாறினாலும் காலங்காலமாக இலக்கணம் உடையதாகக் கருதப்படும். இல்முன், நகர்ப்புறம் என வருவதே. இலக்கண நெறி, முன்றில் புறநகர் என வழங்கப்படுகின்றன.

3. **மரூஉ** தொன்றுதொட்டு வழங்கி வந்த சொற்கள் அவ்வப்போது இலக்கணம் சிதைந்து வருவது மரூஉ. மருவி வருவதால் மரூஉ எனப்படும்.

**தகுதி வழக்கு** ஒரு பொருளை அறிவதற்கு இயல்பாய் அமைந்த சொல் உண்டு. அப்பொருளை அச்சொல்லால் கூறுவது தகுதி ஆகாது. என விடுத்து அதனை வேறொரு சொல்லால் கூறுவதே தகுதி வழக்காகும். இது மூன்று

வகைப்படும்.

1. இடக்கர் அடக்கல் 2. மங்கலம் 3. குழூஉக்குறி

என்பனவாகும்.

## இடக்கர் அடக்கல்

நல்லோர் அவைக்கண் வெளிப்படையாகச் சொல்லத் தகாததை மறைத்து வேறொரு சொல்லால் சொல்லுவது. கால் கழுவி வந்தான்.

## மங்கலம்:

மங்கலம் அல்லாத ஒன்றை மங்கலமாகச் சொல்வது. செத்தாரை துஞ்சினார் என்பது.

## குழூஉக்குறி:

எல்லோரும் அறிந்த ஒன்றை அச்சொல்லால் சொல்லாமல் ஒரு பிரிவினர் தங்களுக்குள் அறிந்து கொள்ளக் கூறுவது குழூஉக்குறி எனப்படும்.

தட்டார் பொன் என்பதை பறி என்பர்.

## சொற்பாகுபாடு

இலக்கணத்திற்கு சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையாகப் பகுக்கப்படுகின்றன. இலக்கியங்களில் காணப்படும் சொற்கள் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என பகுக்கப்படுகின்றன.

## இயற்சொல்

இயல்பாய் யாவர்க்கும் பொருள் விளங்கும் சொல் இயற்சொல் ஆகும்.

மண், பொன், மரம்.

## திரிசொல்

எளிதில் பொருள் புரியாததாக இருக்கும். கற்றவரால் மட்டும் அறியக்கூடியதாக இருக்கும். பொதுமக்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியாததாக இருக்கும்.

கிளி என்பது கிள்ளை, தத்தை, சுகம் என்ற சொற்களால் குறிப்பிடப்படுவது.

## திசைச்சொல்

தமிழ் நாட்டிலுள்ள பன்னிரண்டு வட்டார வழக்குகளில் அவற்றுக்கே உரிய வழக்குச் சொற்களும் தமிழில் கலந்துள்ள பிறமொழி அல்லாத மற்ற சொற்களை வட்டார வழக்கு என்பர்.

| | திசைச்சொல் | | பொருள் |
|---|---|---|---|
| 1. | பெற்றம் | – | பசு |
| 2. | சொன்றி | – | சோறு |
| 3. | தள்ளை | – | தாய் |
| 4. | செய் | – | வயல் |

## வட சொல்

தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் உரிய பொது எழுத்துக்களாலும் வடமொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்களாலும் இரு மொழிகளுக்கும் உரிய பொது சிறப்பு எழுத்துக்களாலும் செய்யுளில் வழங்கும் சொற்கள் வட சொற்கள் ஆகும்.

1. சபை - ஸபா
2. பாடை - பாஷா
3. அரி - ஹரி
4. அரன் - ஹரன்.

## பெயர்ச் சொற்கள்

பொதுவாகப் பெயர்சொற்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் நிலையில் பொருள் உணர்த்தும்.

## பெயர்ச்சொல் பாகுபாடு

பெயர்ச்சொற்கள் உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள், பொதுப் பெயர்கள் (விரவுப் பெயர்கள்) என மூன்று வகையாகப் பகுக்கப்படுகின்றன.

## உயர்திணைப் பெயர்கள்

உயர்திணை ஆண்பால் பெயர்கள், உயர்திணைப் பெண்பால் பெயர்கள், உயர்திணை பலர்பால் பெயர்கள் என மூன்றாகப் பகுக்கப்படுகிறது.

## ஆண்பால்ப் பெயர்கள்

அன், ஆன், னகர விகுதி பெற்றுவரும்.

1. பொருளால் வரும் பெயர் - எமன், ஒருவன், அவையத்தான்.
2. இடத்தால் வரும் பெயர் - வெற்பன், மறவன்.
3. காலத்தால் வரும் பெயர் - வேனிலான், ஆதிரையான்
4. சினையால் வரும் பெயர் - திண்தோழன், கரிகுழலன்
5. குணத்தால் வரும் பெயர் - கரியன், அறிஞன்
6. தொழிலால் வரும் பெயர் - ஓதுவான், எ.வான்
7. இடைச்சொல்லால் வரும் பெயர் - அவன், பிறன்
8. ஆண்பாற் பெயர்ச்சொற்கள் - நம்பி, ஆடூஉ, கோ.

## அஃறிணைப் பெயர்ச்சொற்கள்

அஃறிணைப் பெயர்கள் ஒருமை, பன்மை என்னும் எண்ணை மட்டும் காட்டுவதால் ஒன்றன்பால் பெயர்கள் பலவின்பால் பெயர்கள் எனப் பகுக்கப்படுகின்றன.

## இருதிணைப் பொதுப்பெயர் (விரவுப் பெயர்கள்)

பொருள் அடிப்படையில் வரும்

1. முதற்பெயர் நான்கு 2. சினைப்பெயர் நான்கு

3. சினை முதற்பெயர் நான்கு 4. முறைப்பெயர் இரண்டு
சொல் நிலையில் வரும்

5. தன்மை இடப் பெயர்கள் நான்கு 6. முன்னிலை இடப்பெயர்கள் ஐந்து

7. மூன்று இடத்திலும் வரும் எல்லாம் 8. படர்க்கை இடப் பெயர்கள் தாம், தான் என வருபவை விரவுப் பெயர்கள் எனப்படும்; இருதிணைப் பொதுப் பெயர்களாகும்.